# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்
## பட்டப்பின்படிப்பு கல்வி திப்புளோமாக் கற்கைநெறி
## (முழுநேரம்) -2017/2018

### முதலாம் பருவப் பரீட்சை

## CU 502 கல்வியின் உளவியல் அடிப்படைகள்

நேரம்: 30 நிமிடங்கள்

சுட்டிலக்கம்: ...................

## பகுதி I

- சகல வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை தருக.
- சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

(1) உளவியல் என்ற பதத்தின் நவீன வரைவிலக்கணமானது பின்வருவனவற்றுள் எது?

1. மனித உளம் தொடர்பான விஞ்ஞானரீதியான கற்கை
2. மனித நடத்தை மற்றும் உளச்செயன்முறை பற்றிய விஞ்ஞானரீதியான கற்கை
3. மனித உடற்செயற்பாடு தொடர்பான விஞ்ஞான அடிப்படையிலான கற்கை
4. மனித அறிகைச் செயன்முறை தொடர்பான விஞ்ஞானரீதியான கற்கை

(2) எரிச் எரிக்சனின் உளச்சமூக விருத்திக் கொள்கையின்படி பின்வருவனவற்றுள் எந்த சவாலானது துள்ளுநடைப்பருவ பிள்ளையிடம் காணப்படும்?

1. நம்பிக்கை எதிர் அவநம்பிக்கை
2. முயற்சித்தல் எதிர் குற்ற உணர்வு
3. தன்னாட்சி எதிர் வெட்கம் மற்றும் சந்தேகம்
4. முயற்சி எதிர் தாழ்வு சிக்கல்

(3) பின்வருவனவற்றுள் எந்த உளப்பாலியல் பருவத்தில் ஈடிபஸ் மற்றும் எலக்ரா சிக்கலானது எழுகின்றது என சிக்மண்ட் புரொயிட் குறிப்பிடுகின்றார்?

1. வாய்வழி இன்பநிலைப் பருவம்
2. குதவழி இன்பநிலை பருவம்
3. பாலுறுப்பு இன்பநிலைபருவம்
4. மறைநிலைப் பருவம்

(4) ஜீன் பியாஜேயின்படி தன்முனைப்பு தன்மை அதிகம் காணப்படும் பருவம் பின்வருவனவற்றுள் எது?

1. முன் உளத்தொழிற்பாட்டு பருவம்
2. தூல சிந்தனைப் பருவம்
3. நியம சிந்தனைப் பருவம்
4. புலனியக்க பருவம்

(5) கட்டிளமைப் பருவத்தின் இயல்பு பின்வருவனவற்றுள் எது?

1. மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் காணப்படுதல்.
2. சகபாடிகளுடன் இடைவினைத்தொடர்பு ஏற்படுத்துவதற்கான தேவை
3. கருத்து நிலையில் சிந்திப்பதற்கு தூலப் பொருட்கள் தேவைப்படுதல்
4. தன்முனைப்புத் தன்மை குறைவடைந்திருத்தல்

(6) சிக்மண்ட் புரொயிட்டின்படி பின்வருவனவற்றுள் ஆளுமையின் எக்கூறு/கூறுகள் நனவிலி விசையின்பாற் தொழிற்படுகின்றது?

1. அகம் 2. இட் 3. அதியகம் 4. அகம் மற்றும் அதியகம்

(7) ஆபிரகாம் மாஸ்லோவின் ஊக்கல் கொள்கையின்படி பின்வருவனவற்றுள் எது சரியானது?

1. மனித தேவைகள் எழுமாற்று முறையில் அவசியத்தையொட்டி எழுகின்றன.
2. அடிப்படைத் தேவைகள் திருப்தியடைந்த பின்னரே அதற்கடுத்த தேவை எழுகின்றது
3. மனித தேவைகள் யாவும் பிறப்பிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றன.
4. சமூகத் தேவைகள் எழுவதற்கு அடிப்படைத் தேவைகளின் முழுமையான திருப்தி அவசியம்

(8) பிள்ளைகளின் சாதகமான சுயஎண்ணக்கரு விருத்திக்கு நிபந்தனையற்ற ஆதரவு அவசியம் என்ற கருத்தை வெளியிட்ட உளவியலாளர்,

1. மார்கிரட் மீட்
2. சிக்மண்ட் புரொயிட்
3. கார்ள் ரொஜேர்ஸ்
4. ஆபிரகாம் மாஸ்லோ

(9) ஸ்கின்னரின் தொழிலி நிபந்தனைப்பாட்டுக் கற்றல் கொள்கையின்படி உயிரி வெளிப்படுத்தும் சகல துலங்கல்களுக்கும் மீளவலியுறுத்தப்படுதலானது,

1. இடையிட்ட மீளவலியுறுத்தல்
2. விகித அளவிடை மீளவலியுறுத்தல்
3. தொடர்ச்சியான மீளவலியுறுத்தல்
4. காலயிடைவெளி மீளவலியுறுத்தல்

(10) ஆளுமை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் **சரியானது** எது?

1. ஆளுமைப் பண்புகள் யாவும் பிறப்பிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றன.
2. ஒருவரின் ஆளுமையானது சூழலுக்கேற்ப மாற்றமடையும்
3. பண்புகளின் அடிப்படையில் ஒருவரின் ஆளுமையை எதிர்வுகூறுதல் கடினம்
4. ஆளுமை விருத்தியில் பரம்பரை மற்றும் சூழலின் செல்வாக்கு காணப்படும்.

(11) கெஸ்டோல்ட் கொள்கையின்படி அகக்காட்சி தோன்றுவதற்கான அடிப்படைக்கூறு,

1. ஒழுங்கமைக்கப்பட்ட புலக்காட்சிப் புலம்
2. தொடர்ச்சியாக வழங்கப்படும் மீளவலியுறுத்தல்கள்
3. தொடர்ச்சியாக வழங்கப்படும் பயிற்சிகள்
4. பிறப்பிலிருந்து பெற்றுக்கொள்ளும் சிந்தனை ஆற்றல்

(12) புலக்காட்சி பற்றிய பின்வரும் கூற்றுகளுள் **சரியானது** எது?

1. புலக்காட்சி மூலம் சூழலைப் பற்றிய அறிவு பெற்றுக்கௌள்ளப்படுகின்றது.
2. புலக்காட்சி ஏற்பட்ட பின்னரே புலத்தூண்டிகள் பற்றிய கவனம் ஏற்படுகின்றது.
3. புலத்தூண்டல்களுக்கு உறுத்துணர்வு காட்டுதல் புலக்காட்சியாகும்.
4. புலனுறுப்புகளினுடாக பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் புலக்காட்சியாகும்.

(13) ஞாபகத்தின்போது நடைபெறும் செயன்முறை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது சரியானது?

1. தவவலை தொடர்பாடல் மூலம் உள்வாங்கிக் கொள்ளுதல், குறுங்கால ஞாபகம், புலனுணர்வு ஞாபகம், நீண்டகால ஞாபகம்
2. தவவலை தொடர்பாடல் மூலம் உள்வாங்கிக் கொள்ளுதல், புலனுணர்வு ஞாபகம், நீண்டகால ஞாபகம், குறுங்கால ஞாபகம்,
3. தவவலை தொடர்பாடல் மூலம் உள்வாங்கிக் கொள்ளுதல், புலனுணர்வு ஞாபகம், குறுங்கால ஞாபகம், நீண்டகால ஞாபகம்
4. தவவலை தொடர்பாடல் மூலம் உள்வாங்கிக் கொள்ளுதல், குறுங்கால ஞாபகம், புலனுணர்வு ஞாபகம், மறத்தல்

(14) எந்தவொரு பாடத்தையோ அல்லது எந்தவொரு விடயத்தையோ முதன்முதலில் ஆரம்பிக்கும்போது அது பற்றிய பொதுவான ஒரு அறிமுகத்தை வழங்குதலானது முன்வைக்கும் விடயம் பற்றிய தெளிவான விளக்கத்தை வழங்கும் என்கின்ற கருத்தை முன்வைத்த உளவியலாளர்,

1. டேவிட் ஒசுபல்
2. கார்ள் ரொஜேர்ஸ்
3. B.F. ஸ்கின்னர்
4. லீவ் விகொட்ஸ்கி

(15) குறித்த மாணவனுக்கு தரப்பட்ட எண்கோலத்திலுள்ள எண்களை இறங்கு வரிசைப்படுத்தும் அல்லது ஏறுவரிசைப்படுத்தும் ஆற்றல் எவ்வாறு அழைக்கப்படும்?

1. தர்க்கரீதியான சிந்தனை
2. தூல சிந்தனை
3. சிந்தனை பின்திரும்புதல்
4. காப்புச் சிந்தனை

(16) கீழே தரப்பட்டுள்ள தொழில் நிபுணர்களிடம் காணப்படும் நுண்மதி வகையினை சரியாக காட்டும் தொடர்பு எது?

| **தொழில் துறை** | | **நுண்மதி வகை** |
|---|---|---|
| கட்டட கலைஞர் | A | உடல் உடலியக்கசார் நுண்மதி |
| உளவியலாளர் | B | பார்வை இடவெளிசார் நுண்மதி |
| நடனக் கலைஞர் | C | ஆளக நுண்மதி |

1. A, B, C,  2. B, C, A  3. C, A, B  4. B, A, C

(17) எண்ணக்கருவாக்கச் செயன்முறை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் சரியானது எது?

1. வயது மட்டத்துக்கும் எண்ணக்கரு கற்கும் ஆற்றலுக்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது.
2. இரண்டாம்நிலை எண்ணக்கரு கற்பதற்கு ஆரம்பநிலை எண்ணக்கரு பற்றிய அறிவு அவசியமில்லை.
3. ஆரம்பநிலை எண்ணககருவானது வாழ்க்கைக் காலத்தில் ஒரு தடவை கற்றால் மாத்திரம் போதுமானது.
4. கருத்துநிலை எண்ணக்கருவை எந்த வயது மட்டத்தினருக்கும் கற்பிக்கலாம்.

(18) "மனிதன் பிறக்கும்போதே சகலவிதமான ஆற்றல்களையும் கொண்டவன்" என்ற கருத்தை முன்வைத்த உளவியலாளர்,

1. அல்பேட் பண்டுரா
2. சிக்மண்ட் புரொயிட்
3. கார்ள் ரொஜேர்ஸ்
4. லீவ் விகொட்ஸ்கி

(19) அல்பேட் பண்டுரா முன்வைத்த சமூக கற்றல் கொள்கையின்படி கற்றல் என்பதால் **கருதப்படாதது** பின்வருவனவற்றுள் எது?

1. அவதானிக்கப்படும் நபர் ஒரு முன்மாதிகையாக தொழிற்படுதல்
2. கற்றலானது முயன்று தவறுதல் மூலம் இடம்பெறும் பயிற்சியின் விளைவாகும்.
3. மாதிரிகையின் நடத்தையானது கற்போனால் அவதானத்திற்குட்படுதல் அவசியம்
4. நடத்தையானது மீளவலியுறுத்தப்படுகையில் குறித்த நடத்தை உறுதியடைதல்.

(20) மொழிப்பாடத்தில் குறைந்த வினையாற்றலைக் கொண்டிருக்கும் குறித்த மாணவனிடம் காணப்படும் கற்றல் குறைபாடு

1. கணிதபாடக் குறைபாடு (dyscalculia)
2. கற்றல் குறைபாடு
3. நுண்மதி விருத்திக் குறைபாடு
4. எழுத்து வாசிப்புக் குறைபாடு (dyslexia)

***********